**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.253/2020**

**02.03.2026**

**P.W.2- தன்னப்பன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாதி அழைத்ததன் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி எனக்கு நண்பர் என்றால் பக்கத்து ஊர்க்காரர். நான் இடையப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் பிரதிவாதிகளை தெரியும். 1ம் பிரதிவாதியின் கணவர் 2020ம் வருடம் நவம்பர் மாதம் இறந்து போய்விட்டார். 1ம் பிரதிவாதியை சுமார் 10 வருடங்களாக தெரியும். வாதியை சிறுவயதிலிருந்தே தெரியும். நான் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை வாதியின் வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்யும்போது 1ம் பிரதிவாதியின் கணவர் அங்கு இல்லையென்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று உசிலம்பட்டியில் வைத்து கையெழுத்து போடவில்லை என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.02 17:58:42 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.